விடுதிகளில் இடம் கிடைப்பதில்லை. எனவே அவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, மலைவாழ் மாணவ, மாணவிகள் பயன்பெறுகின்ற வகையில், பழங்குடியினருக்காக தனியாக ஒரு கலைக் கல்லூரியை அங்கே அமைப்பதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் பழங்குடியினருக்கென தனியாக கல்லூரி கேட்டிருக்கின்றார். மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களிடம் பதில் இருந்தால் சொல்லுங்கள்.

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை உயர் கல்வித் துறை சம்பந்தப்பட்டது. இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 11–15

2. தனது உடல் நலம் குறித்து விசாரித்தோருக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் நன்றி—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் உடல் நலம் பெற்று, மீண்டும் அவைக்கு வந்து, இந்த அவையை நடத்துகிற (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு நல்ல சூழ்நிலையைப் பெற்றமைக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய வாழ்த்துகளை முதலில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.